DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender | | |
| Miscellaneous | Case No | CC 11/17 |
| Priliminary Register | | |
| Sessions | | |
| | Prosecution | PW 1 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |
| Name | | Ponnathal |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

28.05.2019 முதல் விசாரணை:

நான் மேலச்செம்பட்டியில் குடியிருந்துவருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையில் தேர்தல் தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது. சுமார் ஐந்தரை வருடத்திற்கு முன்பு நான் நாட்டாமை வீட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்த போது மாலை 3 மணியளவில் தெய்வம் என்பவர் என்னை அடிவயிற்றை பிடித்து அடித்தார். நான் அதற்கு திட்டினேன். பின்னர் விட்டிற்கு சென்று விட்டேன். வீட்டில் என் மகளுக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. அப்போது தெய்வம், காசிமாயன், சோங்கம்மாள், ஒச்சம்மாள், ஆகியோர் என் வீட்டிற்குள் நுழைந்து எனது இடது காதைப் பிடித்து இழுத்தார்கள். என்னை அடித்தார்கள். இனறைக்கு உன்னை உயிரோடு விட்டு விட்டேன். இல்லாவிட்டால் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள். நான் காதில் அணிந்திருந்த ஒரு தண்டட்டியை காதில் இருந்து அறுத்து

பிடுங்கி விட்டார்கள். அதை நீதிமன்றம் மூலம் மனு செய்து பெற்றுக்கொண்டேன். மேற்படி தண்டட்டியையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன். நான் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அ.சா,ஆ,1. என்னிடமிருந்து பெறப்பட்ட தண்டட்டி 1 சா.பொ.1 போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

எங்களுககும் எதிரிகளுக்கும் உள்ள முன் விரோதம் உள்ளாட்சித் தேர்தலின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் சரிதான.செல்லப்பாண்டி எனக்கு உறவினர் என்றால் சரிதான். செல்லப்பாண்டி அந்ததேர்தலில் வெற்றி பெற்றார் என்றால் சரிதான். அவரை எதிர்த்து போட்டி போட்டவர் ஆஜர் எதிரி. எங்களுக்கும் அவர்களுக்கும் முன் விரோதம் ஏற்பட்டதற்கு காரணம் தேர்தல் என்றால் சரிதான. அதனால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையில் அடிக்கடி சண்டை வந்தது. அதன் பிறகு கோவிலில் சுண்டல் வாங்குவதில் எங்களுக்கம் எதிரிகளுக்கும் பிரச்சனை என்றால் சரிதான். சுண்டல் வாங்கிய தகராறு என்னை அடித்ததற்கு 10 தினங்களுக்கு முன்பாக என்றால் சரிதான். அதனால் நானும் எதிரிகளும் பேசிக்கொள்வதில்லை. முதலில் சம்பவம் நடைபெற்றது நாட்டாமை வீட்டிற்கு முன்பாக தான். அப்போது வேறு நபர்களுக்குள் சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்த சண்டையை வேடிக்கை பார்ப்பதற்காக தான் நான் முதலில் போனேன். அந்த சண்டையின் போது நிறைய கூட்டம் என்றால் சரிதான். நாட்டாமை வீட்டிற்கு அருகில் எனக்கு அடி விழுந்து விட்டது. நாட்டாமை வீட்டின் அருகில் நடந்த சண்டையில் எனக்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.கூட்டமாக இருந்ததால் யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நாட்டாமை வீட்டிற்கு அருகில் வைத்து என் வயிற்றில் அடித்தார்கள். கண் ஆபரேசன் செய்திருந்ததால் கண் திரை போட்டு கருப்பு கண்ணாடி அணிந்திருந்தேன். நாட்டாமை விட்டிலிருந்து என் வீடு 100 அடி தூரத்தில் இருக்கும். என் வீட்டில் நானும் என் மகளும் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். அடி விழுந்த உடன் நான்மயங்கி விட்டேன். மருத:துவமனையில் தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. மயக்கம் தெளிந்த போது நான் பார்த்த போது என் காதில் தண்டட்டி காணாமல் போயிருந்தது. சிந்து பட்டி காவல் நிலையத்தில் தண்டட்டியை வைத்திருப்பதாக சொன்னார்கள். நான் மருத:துவமனையில் இருந்ததால் யார் தண்டட்டியை போலிசாரிடம் கொடுத்தார்கள் என்ற எனக்குதெரியாது. கண் ஆபரேசன் செய்திருந்ததாலும்

மயக்கமடைந்திருந்ததாலும் யார் தண்டட்டியை அறுத்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். சிந்து பட்டி காவல் நிலையத்தில் தண்டட்டி இருப்பது எனக்கு நேரடியாக தெரியும். செல்வம் தண்டட்டியை சிந்துபட்டி காவல் நிலையத்தில் கொடுத்து விட்டார். மருத்துவமனையில் மயக்கம் தெளிந்த போது என் மகள் புகார்கொடுத்து விட்டதாக என்னிடம் சொன்னார். சிந்து பட்டி காவல் நிலையத்தில் வைத்து புகார் எழுதப்பட்டு என் மகள் ரேகை வைத்தார். நான் மயக்கமாக இருந்ததால் தெளிந்த பிறகு நானும் ரேகை வைத்தேன். போலிசார் விசாரணையில் நான் 23.09.2012ம் தேதி மாலை 6 மணிக்கு நேராக உசிலம்பட்டி மருத்துவமனை சென்று விட்டுபின்னர் சிந்து பட்டி காவல் நிலையத்திற்க வந்ததாக வாக்கமூலம் கொடுத்திருந்தால் அது சரியல்ல. என் வீட்டின் அருகில் சண்டை நடந்த போது நிறைய பேர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னிடம் தண்டட்டியை நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ளுமாறு சொன்னார்கள். நான் எப்போது காவல் நிலையத்திற்கு சென்றேனோ அப்போதே தண்டட்டி சிந்து பட்டி காவல் நிலையத்தில் இருந்தது. மறுநாள் தண்டட்டி கைப்பற்றப்பட்டதாக சொனனால் அது தவறு என்றால் சரிதான். நானும் எதிரிகளும் ஒன்றாகத்தான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். எங்களுடன் வேறு யாரும் வரவில்லை. எங்கள் மீதுஅவர்களும் எதிரிகள் மீதுநாங்களும் தனித்தனியாக புகார் கொடுத்தோம். நான் நாட்டாமை விட்டிற்குஅருகில் நடந்த சண்டை சம்பந்தமாக வேடிக்கை பார்க்க சென்ற போது என் தண்டட்டி அறுந்துவிழுந்து விட்டதாகவும் எதிரிகள் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் தண்டட்டியை அறுத்து விட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்தசமயத்தில் செல்லப்பாண்டி ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததால் எங்களுக்குஆதரவாக செயல்பட்டு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செல்லப்பாண்டிக்கு ஆதரவாக எதிரிகள் தண்டட்டியை அறுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி 2 காசம்மாள். செல்லப்பாண்டியின் மாமியார் என்றால் சரிதான். சாடசி கருத்தக்கண்ணன். எனக்கு மாமா. ஒச்சாத்தேவர் மகன் கணேசன் எனக்கு சித்தப்பா அவர் இறந்து விட்டார். செல்லம்மாள் என் மகள். முத்தையாத் தேவர் மகன் ஜெயக்கொடியும் நானும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சாட்சிகள் அனைவரும் எனக்கு உறவினர்கள் என்றும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம்

அளிககிறேன் என்றால் சரியல்ல. என் தண்டட்டி காணாமல் போகவில்லை என்றும எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும் கொலை மிரட்டல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது உள்ள காழப்புணர்ச்சியின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.